# தகவல் பாலம்

## துாய ஆரோக்கிய அன்னை பங்கு

# OUR LADY OF GOOD HEALTH PARISH

**Volume 1, Issue 4** **June 2019**



**131 Birchmount Road,**
**Scarborough, ON. M1N 3J7**
(Birchmount & Danforth Ave.)

**Tel: 416-264-OLGH (6544)**
**Fax: 416-264-6545**

**Office@olghtamilparish.com**

**www.olghtamilparish.com**


## Fr. Charles W. Collins

PASTOR

## MASS SCHEDULE

**Sunday: 12:30 PM & 4:30 PM**

**Tuesday & Wednesday: 7:30 PM**

**First Friday: 7:30 PM**

## Office Hours

**Monday – Closed**
**Tuesday-Friday: 9:00 am – 6:00 pm**
**Saturday: 9:00 am – 3:00 pm**
**Sunday: 11 am – 4 pm; 5:30 pm – 7 pm**

**Maureen Rajadurai**
PARISH SECRETARY

**இவ்வருடம் எமது தமிழ் கத்தோலிக்க பங்கின் ௨௫ஆது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றோம். எமது தமிழ் கத்தோலிக்க பங்கில் உங்களது குடும்பங்களையும் பதிவு செய்துகொள்ள மறக்காதீர்கள்.**

**Please REGISTER your Family at our Tamil Catholic Parish!!**

## வாரநாள் திருப்பலிகள்

**செவ்வாய்க்கிழமை: தூய அந்தோனியார் நவநாள்**
மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு திருப்பலிம் இடம்பெறும்.

**புதன்கிழமை: சதாசகாய அன்னை நவநாள்**
மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு திருப்பலிம் இடம்பெறும்.

**முதல் வெள்ளி: நற்கருணை வழிபாடு**
மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு நற்கருணை வழிபாடும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும்.

---

## திருமுழுக்கு அருட்சாதனம்

**பிரதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3:00 மணி**

பெற்றோர்கள் திருமுழுக்கு அருட்சாதன ஆயத்த வகுப்பில் பங்கெடுப்பது முக்கியமானது. ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற முதல் செவ்வாய்க்கிழமைகளில் மாலை 6:00 மணி தொடக்கம் மாலை 7:00 மணி வரை எமது பங்கில் ஆயத்த வகுப்புகள் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

---

## ஒப்புரவு அருட்சாதனம்

அனைத்து திருப்பலிகளின் முன்பும் பின்பும் அல்லது முன்னேற்பாட்டுடன் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## திருமண அருட்சாதனம்

தயவுசெய்து பங்குத்தந்தையை காலம் தாமதிக்காமல் தொடர்பு கொள்ளவும். ஒரு வருடத்திற்கு முன்னர் அறிவிப்பது விரும்பத்தக்கது. ரொறன்ரோ மறைமாவட்டத்தினால் ஒழுங்குசெய்யப்படுகின்ற திருமண ஆயத்த வகுப்புகளில் பங்குபற்றி சான்றிதழைப் பெற்றுக்கொள்வது அவசியமானது.

---

## பாடகர் குழாம்

எமது ஆலய பாடகர் குழாமில் இணைந்து கொள்ள விரும்பும் பாடகர்கள் மற்றும் இசைக் கலைஞர்களை அன்போடு அழைக்கிறோம். தயவுசெய்து பங்குத்தந்தையுடன் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, உங்களது விருப்பத்தைத் தெரிவிக்கவும்.

---

## பீடப்பணியாளர்கள்

இவ்வருடம் முதன்நன்மை பெற்றுக்கொண்ட அனைத்து சிறுவர்களும் எமது பீடப்பணியாளர்கள் குழுவில் சேர்ந்துகொள்ளலாம்.

அனைத்து பீடப்பணியாளர்களுக்குமான கோடைகால ஒருநாள் ஒன்றுகூடல் வருகின்ற ஆவணி மாதத்தில் நடைபெறவிருக்கின்றது. அதற்கான திகதி பின்னர் அறியத்தரப்படும்.

---

## Catholic Women's League

**OLGH CWL**ல் இணைந்து கொண்ட அனைவருக்கும் நன்றி. இன்னும் சேர்ந்துகொள்ள வாய்ப்புள்ளது. அனைத்து பெண்களையும் அன்போடு அழைக்கிறோம்.

---

## Mission Co-Operative Program

இவ்வருடம் எமது பங்கில் ஆடி 14ம் திகதி ஞாயிறுக்கிழமை சேர்க்கப்படுகின்ற நிதி யாழ் மறைமாவட்டத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கான காகித உறைகளில் உங்களின் மனமார்ந்த பங்களிப்பை செலுத்தலாம்.

---

## தேவ அழைத்தல்

எமது குடும்பங்களில் தேவ அழைத்தல் உருவாக வேண்டுவோம். பீடத்தை அலங்கரிக்கும் இயேசுவின் பிரதிநிதிகளாக எமது பிள்ளைகளும் உருவாக உற்சாகம் கொடுப்போம். 'அழைத்தலின் விளை நிலம் குடும்பம்'. இறையருளால் நனவாகும்.

---

**This is Your Church!**
**Get Involved!!**

**அனைவருக்கும் இறை ஆசியுடன் கூடிய தூய அந்தோனியார் பெருவிழா வாழ்த்துகள்**



கிறிஸ்து இயேசுவில் அன்பான சகோதர, சகோதரிகளே, இளையோரே, என் அன்பார்ந்த சிறுவர்களே,

இந்தக் கோடை காலத்தை சரியான முறையில் பயன்படுத்த உங்களனைவரையும் அழைக்கின்றேன். அதிக நேரத்தை உங்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் செலவிடவும் வீட்டில் மற்றவர்களுக்கு துணையாக, உதவியாக இருக்கவும் முயற்சி செய்யுங்கள்.

இக்காலத்தில் உங்கள் எதிர்கால வாழ்க்கையை வளப்படுத்துகின்ற நிகழ்வுகள், தலைமைத்துவப் பயிற்சிகள், வாசித்தல் போன்ற அறிவபூர்வமான, ஆழுமையை வளர்க்கக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபட்டு உங்கள் வாழ்வை வளப்படுத்துங்கள்.

தாயகத்தில் உங்களைப் போன்ற பலர் அறிவோடும், ஆற்றலோடும் இருக்கின்ற பொழுதிலும் அவற்றை தொடர்து வளர்க்கமுடியாமல் முடங்கிப்போகின்றார்கள். நாம் எமக்கு கிடைக்கினற ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் திறமையாக பயன்படுத்தி தாயகத்தில் உள்ளவர்களுடனும் பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றேன்.

நீங்கள் விடுமுறையில் செல்லும் போதும் ஞாயிறு திருப்பலிக்கு விடுமுறை கொடுப்பது நல்லதல்ல.

இயேசுவின் முழுமையான இறைஆசீர், உங்கள் மீதும், உங்களது அன்பான குடும்பத்தினர், பிள்ளைகள், உறவினர் நண்பர்கள் மீதும் நிறைவாகத் தங்கவேண்டுமென ஆசித்து வாழ்த்துகிறேன். இறை இயேசுவின் ஆசியில் உங்கள் வாழ்வில் அனைத்தும் வெற்றியாக அமைந்திட மனநிறைவுடன் வேண்டுகின்றேன்.

**சாள்ஸ் கொலின்ஸ், பங்குத் தந்தை**
**தூய ஆரோக்கிய அன்னை தமிழ் பங்கு**

## றொறன்ரோ தமிழ் கத்தோலிக்க சமூகமும், தூய ஆரோக்கிய அன்னைப் பங்கும் இணைந்து நடாத்தும்

### 32வது மிட்லண்ட் திருத்தலத் திருப்பயணம் சனிக்கிழமை, ஆடி / July 20, 2019



**திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் கூட்டுத்திருப்பலிக்கு தலைமை தாங்குவார்**

**மதியம் 11:00 மணி - திருச்செபமாலை**
**மதியம் 12:00 மணி - கூட்டுத் திருப்பலி**
**மாலை 03:00 மணி - நற்கருணை வழிபாடு**

### மேரிலேக் மருதமடு அன்னை திருவிழா சனிக்கிழமை, ஆவணி / August 10, 2019



**மதியம் 11:00 மணி - திருச்செபமாலை**
**மதியம் 12:00 மணி - கூட்டுத் திருப்பலி**
**மாலை 03:00 மணி - நற்கருணை வழிபாடு**

## பாடல் புத்தகம் - புதிய செபங்கள்

1400 பாடல்கள் அடங்கிய பாடல் புத்தகம் மிக விரைவில் வெளியிடப்படவிருக்கின்றது. அதில் உங்களுடைய பெற்றோர், பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்களின், நண்பர்களின் நினைவாக புகைப்படத்துடன் கூடிய பக்கம் ஒன்றை பாடல் புத்தகத்தில் பதிவிட விரும்பினால் எமது பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

எமது செபங்களில் பல்வேறு மொழி மாற்றம், சொல் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதை நீங்கள் அறிவீர்கள். ஆலயத்தில் வழங்கப்படும் செபங்கள் அடங்கிய அட்டைகளைப் பயன்படுத்தி, புதிய செபங்களை இணைந்து சொல்வதன் மூலம் எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வோம்.

---

## எமது பணிப் பீடங்கள்

- பங்குச் சபை
- பீடப் பணியாளர்கள்
- வாசகர்கள்
- நற்கருணைப் பணியாளர்கள்
- வரவேற்பாளர்கள்
- பாடகர் குழுவினர்
- மரியாயின் சேனை
- நிதிப் பொறுப்பாளர்கள்
- தன்னார்வத் தொண்டர்கள்

---

## தூய வின்சென்ற் டீ போல் சபை - பணிகள்

தூய வின்சென்ற் டீ போல் சபையினரின் அன்புப் பணிக்காக ஞாயிற்றுக்கிழமை திருப்பலிகளின் நிறைவில் உங்களது அன்பளிப்புகளை கொடுக்கலாம்.

**"சிறு துளி - பெரு வெள்ளம்˙"**
**எமது ஆலயமே எம் குடும்பம்**

---

## நன்றி

அர்ப்பணத்துடனும் நல்மனதுடனும் பணிகளை மேற்கொள்ளும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மகிழ்ச்சியுடன் கூடிய என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், வருகின்ற காலங்களிலும் உங்கள் ஒவ்வொருவரின் பூரண ஒத்துழைப்பை அன்போடு எதிர்பார்த்து நிற்கிறோம். உங்களையும் உங்கள் குடும்பங்களையும் எல்லாம் வல்ல இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்க தினமும் நாம் வேண்டுகிறோம்.







